8. மேலவை விதி 82-ன் கீழ் அறிக்கை.

அரசு ஊழியர்கள் குடும்ப நல நிதித் திட்டம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்ட மேலவை விதி 82-ன் கீழ் ஓர் அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாநில அரசு ஊழியர்களின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களை இந்த அரசு செயற்படுத்தி வருகின்றது என்பதை இந்த அவை அறியும். பணியிலிருந்து ஓய்வு பெறும்போது அல்லது பணியாளர் இறந்துவிடுங்கால், உதவி அளிக்க வேண்டிய அவசியம் கருதியும் சில செயற்குறிப்புகள் அரசின் ஆய்வில் இருந்து வந்துள்ளன. அரசு ஊழியர்களுக்கு நிதி உதவி செய்யும் திட்டம் ஒன்றை அரசு செயலுக்குக் கொண்டு வரவேண்டுமென, அரசிதழ் பதிவில்லாத அரசு ஊழியர்களின் சங்கமும் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. அரசு ஊழியர்கள் குறிப்பிட்ட தொகையை மாதாமாதம் கட்டி, பணியிலிருக்கும்போதே அரசு ஊழியர் இறந்து விட்டால், அவருடைய குடும்பத்திற்கு இந்த உதவித் தொகை அளிக்கப்பட வேண்டும் என்றும், அல்லது அரசு ஊழியர் ஓய்வு பெறும்போது இத்தொகை அவருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் ஊழியர்கள் சங்கம் கோரியுள்ளது. இக்கருத்துக்களை மனதில் கொண்டு அரசு ஒரு புதிய திட்டத்தை வகுத்துள்ளது.

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திட்டத்தின் விவரங்கள் வருமாறு.

இப்புதிய திட்டம் "தமிழ்நாடு அரசு ஊழியர்கள் குடும்ப நல நிதித் திட்டம்" எனப் பெயர் பெறும். இத்திட்டத்தின்கீழ் அரசு ஊழியர்கள் அனைவரும் ஒவ்வொரு மாதமும் ரூ. 10 செலுத்த வேண்டும். இத் தொகை அவர்கள் மாதச் சம்பளப் பட்டியலில் இருந்து பிடித்துக் கொள்ளப்படும். இத்திட்டம் செயலுக்குக் கொண்டு வரப்பட்டபின், பணியில் இருக்கையில் ஊழியர் ஒருவர் இறந்து விட்டால் அவர் ஆற்றிய பணிக்கால அளவு எவ்வளவாக இருந்தபோதிலும் அவரது குடும்பத்திற்கு ரூ. 10,000 கொடுக்கப்படும். தொகை செலுத்தும் அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும்போது அல்லது அவர்கள் பணியிலிருந்து விலகிச்

1973 டிசம்பர், 3] [டாக்டர் மு. கருணாநிதி]

செல்லும்போது அவர்களுக்கு இந்நிதியிலிருந்து அவர்கள் செலுத்தி உள்ள தொகை அதற்கேற்ப அரசு செலுத்தும் தொகை (காண்ட்ரிப்யூஷன்) ஆகியவை அவர்களுக்குக் கொடுக்கப்படும். எடுத்துக்காட்டாக, இத்திட்டம் செயலுக்குக் கொண்டு வரப்பட்ட பிறகு பத்து ஆண்டுகள் கழித்து பணியிலிருந்து ஓய்வு பெறும் அரசு ஊழியர் ஒருவர் இந்த நிதிக்கு ரூ. 1,200 செலுத்தியிருப்பார். அரசு அளிக்கும் தொகை உட்பட அவர் மொத்தம் ரூ. 1,600 பெறுவார். அதேபோல, இருபது ஆண்டுகள் கழித்து பணியிலிருந்து ஓய்வு பெறும் அரசு ஊழியர் மொத்தம் ரூ. 4,000 பெறுவார். இதில் அவர் செலுத்திய தொகை ரூ. 2,400 அரசு அளிக்கும் தொகை ரூ. 1,600. முப்பது ஆண்டுகள் கழித்துப் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர் ரூ, 7,200 பெறுவார். இதில் அவர் செலுத்தும் தொகை ரூ. 3,600. அரசு செலுத்தும் தொகை ரூ. 3,600. அரசு ஊழியர்களுக்கு கணிசமான அளவு நன்மை பயக்கும் இத்திட்டத்தினை இம்மன்றம் வரவேற்குமென நான் நம்புகிறேன். இத்திட்டம் 1974 ஜனவரி முதல் செயலுக்குக் கொண்டு வரப்படும்.

திரு செ. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்தத் திட்டத்தினை வரவேற்கிறேன். அரசு ஊழியர்களுக்கு என கொண்டுவரப்பட்டுள்ள இந்த அருமையான திட்டம் ஆசிரியப்பெருமக்களுக்கும் உண்டா என்று, காலையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதை அறிவித்த நேரத்தில், பலருக்கும் இதுபற்றிச் சந்தேகம் ஏற்பட்டது. எனவே ஆசிரியப் பெருமக்களுக்கும் இத்திட்டம் உண்டா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து ஆசிரியர்கள் சமுதாயத்திற்கு அப்படிப்பட்ட மகிழ்ச்சி தரத்தக்க அறிவிப்பினைச் செய்து அவர்களை வாழ்விக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அரசு ஊழியர்கள் என்றால், ஆசிரியர்களும் அடங்க வேண்டும்.

திரு செ. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அரசு ஊழியர்கள் என்று சொல்லும்போது, தனியார் பள்ளி ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாகக் கருதப்படுவதில்லை. எனவே, இதை விளக்கமாக அறிவித்து, ஃபைனான்ஸிலிருந்து அரசு ஆணை வரும்போது "ஆசிரியர்களுக்குத் தனியாக வரும்" என்று போடப்படுவதால் ஆசிரியர்களுக்கு இருக்கிறதா இல்லையா என்ற சந்தேகம் அடிக்கடி ஏற்படுகிறது. ஆகவே இதை நிவர்த்தி செய்ததற்காக மீண்டும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

[மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை]

7. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(3) தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு, நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/73).

*மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவரவர்களே, "சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு,